





dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 04 | Issue: 062 | 4 Pages | 01.10.2026 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 062 | 4 பக்கங்கள் | 01.10.2026 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்**
**பிறற்குரியாள் தோள்தோயா தார்**

**விளக்கம்:**
கடல் சூழ்ந்த உலகத்தில் நன்மைக்கு உரியவர் யார் என்றொல் பிறனுக்கு உரிமையானவளின் தோளைப் பொருந்தாதவரே ஆவர்

## சோமாலியா: இந்திய மாலுமி உள்பட 5 பேரை கொன்ற கடற்கொள்ளையர்கள் அதிர்ச்சி சம்பவம்



மொகாதிசு, அக். 1

கிழக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு சோமாலியா. இந்திய பெருங்கடல் அமைந்துள்ள இந்நாட்டில் கடற்கொள்ளையர்கள் அதிக அளவில் உள்ளனர். இந்திய பெருங்கடல் வழியாக செல்லும் சரக்கு கப்பல்களை சிறைபிடித்து கடற்கொள்ளையர்கள் கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றனர். சோமாலியாவின் பண்ட்லெண்ட் மாகாணம் தன்னாட்சி மாகாணமாக செயல்பட்டு வருகிறது. இந்த மாகாணத்தில் அதிக அளவில் கடற்கொள்ளை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றனர். இதனிடையே, மத்திய கிழக்கில் இருந்து கச்சா எண்ணெய் ஏற்றிக்கொண்டு கடந்த ஏப்ரல் மாதம் சோமாலியாவுக்கு கப்பல் சென்றுகொண்டிருந்தது. பலாவு நாட்டு கொடியுடன் சென்ற கப்பலில் 17 மாலுமிகள் பயணம் செய்தனர். ஏப்ரல் 21ம் தேதி சோமாலியாவின் பண்ட்லெண்ட் மாகாணம் அருகே சென்றபோது கச்சா எண்ணெய் கப்பலை கடற்கொள்ளையர்கள் கடத்தி சென்றனர். இந்நிலையில், கடத்தப்பட்ட கச்சாஎண்ணெய்கப்பலை சோமாலியாகடற்படையினர் இன்று மீட்டனர். ஆனால், மீட்பு நடவடிக்கையின்போது கடற்கொள்ளையர்கள் நடத்திய தாக்குதலில் இந்திய மாலுமி உள்பட 5 மாலுமிகள் உயிரிழந்தனர். மாலுமிகளில் ஒருவர் இந்தியர், ஒருவர் மியான்மர் நாட்டவர், 3 பாகிஸ்தான் நாட்டவர்கள் என 5 மாலுமிகள் உயிரிழந்தனர். எஞ்சிய 12 மாலுமிகளும், கச்சா எண்ணெய் கப்பலும் மீட்கப்பட்டது.

## அமெரிக்கா: 3 வயதில் கின்னஸ் சாதனை படைத்த சிறுமி



வாஷிங்டன், அக். 1

அமெரிக்காவின்இடாகோ மாகாணத்தை சேர்ந்த பிரபல கின்னஸ் சாதனையாளர் டேவிட் ரஷ், தனது 3 வயது குட்டி மகள் பெலிசிட்டியுடன் இணைந்து 'ஹூலா ஹூப்' விளையாட்டில் புதிய உலக சாதனை படைத்து ஒட்டுமொத்த உலகையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளார்.

விறுவிறுப்பு நிறைந்த இந்த சவாலில், தந்தை டேவிட் ரஷ் சுழற்றி வீசும் ஹூலா ஹூப் வளையத்திற்குள், 3 வயது சிறுமி பெலிசிட்டி மிக துல்லியமாக பாய்ந்து குதிக்க வேண்டும். கண்சிமிட்டும் நேரத்திற்குள் செய்ய வேண்டிய இந்த சாகசத்தை, தந்தைமகள் கூட்டணி மிக நேர்த்தியாக செய்து காட்டியுள்ளது.

இதற்கு முன்பு இந்த விளையாட்டில் 8 முறை வளையத்திற்குள் குதித்ததே உலக சாதனையாக இருந்தது. தற்போது அந்த சாதனையை தகர்த்தெறிந்த இந்த ஜோடி, வெறும் 30 விநாடிகளில் 9 முறை மிக துல்லியமாக வளையத்திற்குள் புகுந்து தாண்டி புதிய கின்னஸ் உலக சாதனையைப் படைத்து வரலாற்றுப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது. கின்னஸ்அமைப்பால்அங்கீகரிக்கப்பட்டஅதிகாரப்பூர்வசான்றிதழ்கள் தபால் மூலம் டேவிட் ரஷ் வீட்டிற்கு வந்து சேர்ந்தன. சான்றிதழ்கள் கைக்கு வந்தவுடன் அதை யாரிடமும் காட்டாத டேவிட், தனது முழு குடும்பத்தையும்திடீரெனஒன்றாகஅமரவைத்தார். பின்னர், யாருக்கும் தெரியாமல் தனது பையிலிருந்து சான்றிதழ்களை எடுத்து, தனது மனைவி மற்றும் மூத்த மகன்களானஜெரமி, பீட்டர் ஆகிய மூவரிடமும் கின்னஸ் சான்றிதழை வழங்கி அதிர வைத்தார்.

இறுதி கட்டமாக, 3 வயது குட்டி பெண் பெலிசிட்டியின் பிஞ்சு கரங்களிலும் அவளது முதல் அதிகாரப்பூர்வ கின்னஸ் சான்றிதழை கொடுத்து ஒட்டுமொத்த குடும்பத்திற்கும் இன்ப அதிர்ச்சி கொடுத்தார். சான்றிதழை கண்டதும் பெலிசிட்டியும் குடும்பத்தினரும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினர்.

டேவிட்டின் மூத்த மகன்களான ஜெரமியும் பீட்டரும் ஏற்கனவே தங்களது தந்தையுடன் இணைந்து வெவ்வேறு உலக சாதனைகளை செய்திருந்தனர். தற்போது, 3 வயது பெலிசிட்டியும் கின்னஸ் சான்றிதழை பெற்றதன் மூலம், டேவிட்டின் மூன்று குழந்தைகளும் ஒரே நாளில் தங்களின் முதல் அதிகாரப்பூர்வ உலக சாதனை சான்றிதழ்களை கையில் ஏந்திப் பிடித்துள்ள அரிய வரலாற்று நிகழ்வு அரங்கேறியுள்ளது. ஒரே நாளில் 3 பிள்ளைகளும் உலக சாதனையாளர்களாக மாறியுள்ள இந்த கின்னஸ் குடும்பத்தின் புகைப்படம் தற்போது உலக அளவில் வைரலாகி வருகிறது.

# திமுகவின் கிளையாக அதிமுக மாறிவிட்டது: முதல்அமைச்சர் விஜய் குற்றச்சாட்டு



தாராபுரம், அக். 1

தாராபுரத்தில் வருகிற 6ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. தாராபுரம் தொகுதியில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து முதல் அமைச்சர் விஜய் இன்று பிரசாரம் செய்தார்.

பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:

என் நெஞ்சில் குடியிருக்கும் தாராபுரம் தொகுதி மக்கள் அனைவருக்கும் வணக்கம்.. வணக்கம்... வணக்கம்... கொங்கு நாட்டு தங்கங்களே... கொங்கு நாட்டு சிங்கங்களே... என் சொந்தங்களே.. இங்கு நான் முதல் அமைச்சராக வரவில்லை; உங்கள் வீட்டு பிள்ளையாக... உறவாக.. மகனாக... தாய்மாமனாக வந்துள்ளேன். ஊழல் ஒழிப்பில் முனைப்போடு உள்ளோம். வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றி வருகிறோம்.

இன்னும் நாங்கள் தான் முதல் அமைச்சர், நாம் தான் அதிகாரத்தில் இருக்கிறோம் என சிலர் நினைக்கின்றனர். மன்னராட்சி மனப்பான்மை எனக்கு இல்லை. தீய சக்தி திமுகவுடன் அதிமுக மறைமுக கூட்டணி. தீய சக்தி திமுகவின் பினாமிபோல் சுய நலமாக சுற்றுபவர்கள் நாம் கிடையாது. மக்களின் நம்பிக்கையை காப்பாற்றுவோம். மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்தவே அரசியலுக்கு வந்துள்ளோம்.

கடவுள் நம்பிக்கை எங்களுக்கு உண்டு, யாருடைய கடவுள் நம்பிக்கைக்கும் நாங்கள் எதிரானவர்கள் அல்ல. கிருஷ்ண ஜெயந்திக்கும், கிறிஸ்துமசுக்கும், பக்ரீத்துக்கும் நாங்கள் வாழ்த்து சொல்வோம். மற்றவர்கள் போல் வெளி வேஷம் போட்டுக் கொண்டு பம்மிக் கொண்டு திமுக போல் இருக்க மாட்டோம். அண்ணா காலத்தில் எளியவர்களை நிறுத்தி மன்னர்களை தோற்கடித்ததாக திமுகவின் துரைமுருகன் பேசுகிறார். துரைமுருகன் கூறியதுபோல் எளியவர்களை நிறுத்தி தான் மன்னர்களை தோற்கடித்தது தவெக.

கொளத்தூர் மக்களுக்கு கையெடுத்து கும்பிட்டு கோடான கோடி நன்றி எனக் கூறுகிறார் மு.க.ஸ்டாலின். திமுக ஆட்சியில் நிறைய தவறுகள் நடந்திருக்கிறது, அதனால் தான் கொளத்தூரில் ஓட்டு போடவில்லை. இனி ஒவ்வொரு தேர்தலிலும் ஸ்டாலின் கோடான கோடி நன்றி எனக் கூறிக் கொண்டேதான் இருக்க வேண்டும். மு.க.ஸ்டாலின் அவன், இவன் என ஒருமையில் பேசுகிறார், நான் பாசமாக பேசுகிறேன். ஆபாச நதி, வன்ம நதியை வளர்த்து வைத்திருக்கிறார் ஸ்டாலின், நீங்கள் பேசப் பேச நாங்கள் உயர்வோம். தரம் தாழ்த்தி பேசப் பேச தவெக உயர்ந்து கொண்டே இருக்கும்.

மக்கள் தீர்ப்புக்கு தலை வணங்குவதாகக் கூறுபவர். தீர்ப்பை மதிக்க மாட்டாராம். பாஜகவின் கிளையாக இருந்த ஒரு கட்சி, தற்போது திமுகவின் கிளையாக அதிமுக மாறிவிட்டது. திமுகவும், அதிமுகவும் ஒன்று தான், இருவருக்கும் ஒரேஓனர்தான். யாரை எதிர்த்து எம்.ஜி.ஆர் கட்சி தொடங்கினார்? யாரை எதிர்த்து ஜெயலலிதா அரசியல் செய்தார்?. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவை அவமானப்படுத்துவது போல் திமுகவுடன் அதிமுக சேர்ந்து சதி.

ம்.எல்.ஏ.வாக இருந்து கொண்டு சத்தியபாமா தவெகவுக்கு வரவில்லை, ராஜினாமா செய்துவிட்டுதான் வந்தார். இதில் எந்தபேரமும்கிடையாது. சர்க்காரியா கமிஷன் பற்றி பேசினால் அதிமுகவுக்கு ஏன் கோபம் வருகிறது?. திமுகவுக்கு முட்டு கொடுக்கிறது அதிமுக. திமுகவை எதிர்ப்பது தவெக மட்டும்தான். தீய சக்தி திமுகவுக்கு ஓட்டு போடக்கூடாது. மக்களுக்கு நல்லது செய்வதற்காக எந்த எல்லைக்கும் செல்வேன்.

திமுக, அதிமுகவின் பொய்களை நம்பாதீர்கள்.. எம்.ஜி.ஆர்.க்கும், ஜெயலலிதாவுக்கும்துரோகம் செய்த அதிமுகவுக்குஓட்டுபோடுவீர்களா?. கொங்கு மக்கள் எப்போதுமே உழைக்கும் மக்கள்.. எனவே தாராபுரம் மக்கள் அனைவரும் உங்கள் வெற்றி வேட்பாளர் சத்தியபாமாவுக்கு வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## பூண்டி புஷ்பம் கல்லூரி வரலாற்று துறையில் "உலக சுற்றுலா தினம் 2026" சிறப்பு மாநில அளவிலான கருத்தரங்கம்



தஞ்சைஅருகில்அமைந்துள்ளபூண்டி ஸ்ரீபுஷ்பம் கல்லூரியின் வரலாற்று துறையில் "உலக சுற்றுலா தினம் 2026" சிறப்பு ஒருநாள் மாநில அளவிலான கருத்தரங்கம் "சுற்றுலாவை மறு வடிவமைக்க டிஜிட்டல் செயல் திட்டமும் செயற்கை நுண்ணறிவும்" எனும் தலைப்பில் ஒரு நாள் மாநில அளவிலான கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

இந்த ஒரு நாள் மாநில அளவிலான கருத்தரங்கின் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் வரலாற்று பேராசிரியரும் , தஞ்சை பிரிஸ்ட் பல்கலைக்கழகத்தின் முன்னாள் கூடுதல் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலருமான பேராசிரியர் எஸ். பூர்ண சந்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசும்போது, "இன்றைய உலகில் சுற்றுலா ஒரு பயன் மிகு தொழிலாக விளங்குகிறது . சுற்றுலா மூலம் நாட்டின் தேசிய வருவாய் அதிகரிக்கிறது . சுற்றுலா பன்னாட்டு ஒற்றுமை உணர்வை வளர்கிறது. மேலும், தற்போது டிஜிட்டல் மாற்றம், செயற்கை நுண்ணறிவு ஆகியவை சுற்றுலாவை மேம்படுத்த பெரிதும் உதவுகின்றன " என்று பேசினார்.

இந்தக் கருத்தரங்கில் இக்கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு ) பேராசிரியர் டாக்டர். வி. மணிராஜ் முதன்மை உரை நிகழ்த்தினார் . முன்னதாக, வரலாற்றுதுறைதலைவர் டாக்டர். எஸ். பிரபாகரன் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். மேலும், இந்த ஆண்டிற்கான கருப்பொருள் நோக்கம் குறித்து டாக்டர்.S.பிரபாகரன் பேசும்போது, "வேகமாக முன்னேறி வரும் தொழில்நுட்பங்கள் குறிப்பாக, செயற்கை நுண்ணறிவு சுற்றுலாத் துறையை மாற்றி அமைப்பதிலும், மறு சீரமைப்பதிலும் ஏற்படுத்தி வரும் ஆழமான தாக்கத்தை இக்கருப்பொருள் எடுத்துக்காட்டுகிறது" என்று பேசினார்.

இந்த கருத்தரங்கில் இக்கல்லூரியின் துணை முதல்வர் டாக்டர் எம். மதன்மோகன்; தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் டாக்டர் சி. சந்திரன்; கலைப்புல தலைவர் பேராசிரியர் கே. திருமாவளவன்; அறிவியல் புலத்தலைவர் டாக்டர் வி.அம்பிகாபதி ஆகியோர்வாழ்த்துரைவழங்கினர்.

இந்தமாநிலஅளவிலானகருத்தரங்கில்பல்துறை பேராசிரியர்கள், 300க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இறுதியில் வரலாற்று துறை உதவி பேராசிரியர் டாக்டர் என் பாண்டியன் நன்றி உரை நிகழ்த்தினார்.

## கும்மிடிப்பூண்டியில் நெடுஞ்சாலை ஆக்கிரமிப்புகள் அகற்றம்



திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி பஜாரில் நெடுஞ்சாலை ஆக்கிரமிப்புகள் பலத்த போலீஸ் பாதுகாப்புடன், வருவாய் துறையினர் முன்னிலையில் புதன்கிழமை அகற்றப்பட்டது.

கும்மிடிப்பூண்டி பஜாரில் நெடுஞ்சாலையை ஆக்கிரமித்து, சாலையின் இருபுறமும் கடைகள் ஆக்கிரமித்து உள்ளன. அத்தோடு நெடுஞ்சாலையை ஆக்கிரமித்து 100க்குமேற்பட்ட சாலையோர கடைகளும் செயல்பட்டு வந்தனர். இதனால் கும்மிடிப்பூண்டி பஜாரில் நெடுஞ்சாலை சுருங்கி கும்மிடிப்பூண்டி பஜார் எப்போதும் போக்குவரத்து நெரிசலோடு காட்சி அளிக்கும்.

கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு கும்மிடிப்பூண்டியில் நெடுஞ்சாலை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, சாலை விரிவுபடுத்தப்பட்ட நிலையில், உரிய பராமரிப்பு இல்லாத காரணத்தால் நெடுஞ்சாலையில் உள்ள கடைகள் நெடுஞ்சாலையை ஆக்கிரமித்து விரிவுபடுத்தப்பட்டன . அத்தோடு நெடுஞ்சாலையோர சிறு வியாபாரிகள் சுமார் 105 பேர் இருந்த நிலையில் தற்போது 200 சிறுகடைகள் உருவாகின.

இதன் காரணமாக கும்மிடிப்பூண்டி பஜார் வழியே வெளியூர் பேருந்துகள் வந்து போகாமல், கும்மிடிப்பூண்டி பைபாஸ் சாலை வழியே செல்லும் சூழல் ஏற்பட்டதால், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மேலும் கும்மிடிப்பூண்டி கோட்டக்கரையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு ஆம்புலனஸ் வாகனங்கள் சென்று வருவதிலும் பெரிதும் சிரமம் ஏற்பட்டது.

இந்நிலையில், கும்மிடிப்பூண்டி பேரூராட்சியின் வளர்ச்சி ஆக்கிரமிப்புகள் காரணமாக தடைபட்டு வருவதால், கும்மிடிப்பூண்டி பஜாரில் நெடுஞ்சாலை ஆக்கிரமிப்புகளை அகற்ற கடைக்காரர்கள் மற்றும் சாலையோர கடைக்காரர்களுக்கு பேரூராட்சி நிர்வாகம் மற்றும் நெடுஞ்சாலை துறை சார்பில் தகவல் தரப்பட்டு ஆக்கிரமிப்புகளை தானே அகற்றிக் கொள்ள தகவல் தரப்பட்டது.

இந்நிலையில், கடந்த வாரம் ஆக்கிரமிப்புகள் அகற்ற திட்டமிடப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றம் புதன்கிழமைக்கு தள்ளிவைக்கப்பட்டது. தொடர்ந்து கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் பாலாஜி முன்னிலையில், கும்மிடிப்பூண்டி டிஎஸ்பி சசிதர் மேற்பார்வையில் 100 போலீஸார் பாதுகாப்புடனும், தீயணப்பு துறையினர் உதவியோடும் 6ஜெசிபி இயந்திரங்களுடன் நெடுஞ்சாலை ஆக்கிரமிப்புகளை அகற்ற நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் வந்த போது, சாலையோர வியாபாரிகள் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு சார் ஆட்சியர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தி, தங்களுக்கு மாற்றிடத்தை தந்த பிறகு ஆக்கிரமிப்பு அகற்ற கோரினர்.

ஆனாலும் அதிகாரிகள் போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்ட நிலையில், ஆக்கிரமிப்பு அகற்றம் கட்டாயம் அகற்றப்படும் என தெரிவித்து போலீஸ் பாதுகாப்புடன் சாலையின் இருபுறமும் உள்ள கடைகளின் ஆக்கிரமிப்புகளை ஜெசிபி இயந்திரம் மூலம் அகற்றினர். அதே நேரம் ஆக்கிரமிப்புகளைஅகற்றும்போதுகடைக்காரர்கள் சிலர் அதிகாரிகளுடன் வாக்குவாத்தில் ஈடுபட்ட நிலையிலும் அதிகாரிகள் முழுவீச்சில் ஆக்கிரமிப்புகளை அகற்றினர். அவ்வாறே பலரும் அவரவர் ஆக்கிரமிப்புகள் அதிகாரிகள் வருவதற்குள் அவர்களே ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொண்டனர்.

இந்த ஆக்கிரமிப்பு அகற்ற பணிகளை நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் ராஜகணபதி, செயற்பொறியாளர் சரவணன், உதவி பொறியாளர் பிரபாகரன் உள்ளிட்டோர் மேற்பார்வை செய்தனர்.

இந்நிலையில் காலை 11 மணிக்கு துவங்கிய ஆக்கிரமிப்புகள் அகற்றம் மாலை 6 மணி வரை நடைபெற்றது. இதன் காரணமாக கும்மிடிப்பூண்டி பஜார் முழுக்க இரும்பு கழிவுகள், உடைந்த சிமெண்ட் அட்டைகள், கற்களால் குவிக்கப்பட்டு காட்சி அளித்தது. மேலும் கும்மிடிப்பூண்டிக்கு தினமும் வந்து போகும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கடைகள் மூடப்பட்டதைகண்டுஏமாற்றத்துடன்திரும்பினர். கும்மிடிப்பூண்டி பஜாரில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட நிலையில், நெடுஞ்சாலைத்துறையினர் நெடுஞ்சாலையில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு கண்காணிப்பதோடு, கும்மிடிப்பூண்டி பஜாரில் போக்குவரத்து நெரிசல் அற்ற சாலை வசதியை ஏற்படுத்த நெடுஞ்சாலைத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# திருப்பூரில் முதல்அமைச்சர் விஜய் ரோடு ஷோ.. மக்கள் உற்சாக வரவேற்பு



திருப்பூர், அக். 1

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. வேட்பாளர் சத்தியபாமா, தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைந்தார். இதனால் அந்த தொகுதிக்கு இடைத்தேர்தல் வருகிற 6ந்தேதி நடைபெற உள்ளது.

இந்த தொகுதியில் த.வெ.க. சார்பில் சத்தியபாமா, தி.மு.க. சார்பில் சுகன்யா, அ.தி.மு.க. சார்பில் பானுமதி, நாம் தமிழர் கட்சியின் சார்பில் கார்த்திகா, இந்திய கம்யூனிஸ்ட் சார்பில் லெட்சுமணன் உள்பட 22 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இந்த தொகுதியில் 5 முனைப்போட்டி நிலவுகிறது.

தேர்தலுக்கு இன்னும் 5 நாட்களே இருப்பதால், பிரதான கட்சி வேட்பாளர்களின் பிரசாரம் சூடுபிடித்துள்ளது. அந்தவகையில், த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமாவுக்கு ஆதரவு கேட்டு அந்த கட்சியின் அமைச்சர்கள் தாராபுரத்தில் முகாமிட்டு வாக்கு சேகரித்து வருகின்றனர். பிரசாரத்தின் சிகர நிகழ்ச்சியாக த.வெ.க. தலைவரும், தமிழக முதல் அமைச்சருமான விஜய் இன்று (புதன்கிழமை) தாராபுரத்தில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பேச உள்ளார்.

இதற்காக தாராபுரத் தில் இருந்து உடுமலை செல்லும் சாலையில் கொண்டரசம்பா ளையம் மாருதி நகரில் 54 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமாக மைதானம் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு முதல்அமைச்சர் விஜய் வாக்கு சேகரிக்க உள்ளார். பொதுக்கூட்டத்தில் பங்கேற்க 10 ஆயிரம் பேருக்கு 'கியூஆர்' கோடுடன் கூடிய சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக இன்று (புதன்கிழமை) மதியம் சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் முதல்அமைச்சர் விஜய் புறப்பட்டு மதியம் 1 மணிக்கு கோவை விமான நிலையம் வந்தார். அங்கிருந்து கார் மூலம் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திற்கு வருகிறார். அவர் வரும் வழியான குண்டடம், ஐ.டி.ஐ. கார்னர், அமராவதி சிலை ரவுண்டானா, பூக்கடை கார்னர், அண்ணாசிலை, தாராபுரம் போலீஸ்நிலையம், அலங்கியம் சிக்னல், உடுமலை ரோடு வரை சாலையின் வழிநெடுக மக்கள் திரண்டு இருந்து முதல்அமைச்சர் விஜய்க்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். அவர்களை பார்த்து உற்சாகமாக கை அசைத்தபடி முதல் அமைச்சர் விஜய் வந்தார்.

தாராபுரம் நோக்கி செல்லும் வழியில் த.வெ.க கொடி நிறத்தில் தொண்டர் ஒருவர் வழங்கிய பிரம்மாண்ட மாலையை வாங்கிக் கழுத்தில் அணிந்துகொண்டார். மேலும் பிரசாரம் நடைபெறும் இடத்தில் ஆண்கள் அணி, பெண்கள் அணி என இரு அணியாக நின்று பிரசார பாடலுக்கு வைப் செய்து வருகின்றனர்.

கோவை விமான நிலையத்தில் இருந்து தாராபுரத்திற்கு பிரசார வாகனத்தில் சென்ற முதல்அமைச்சர் விஜய்யிடம் மனு கொடுக்க பெண் ஒருவர் காத்திருந்தார். அவரை கவனித்த முதல்அமைச்சர் விஜய், பிரசார வாகனத்தை நிறுத்தி மனுவை பெற்றுக்கொண்டு, பின்னர் ரோடு ஷோவைத் தொடர்ந்தார்.

# சென்டிரல் ரெயில் நிலையத்தில் கண்காட்சி: பயணிகள், குழந்தைகளை கவர்ந்த கலைப்படைப்புகள்



சென்னை அக். 1

சென்டிரல் ரெயில் நிலையத்தில் நடந்த கண்காட்சியில், பயணிகள் மற்றும் குழந்தைகளை கவர்ந்த கலைப்படைப்புகள் வைக்கப்பட்டிருந்தன.

ரெயில்வே ஊழியர்களின் பன்முகத்திறமையை வெளிப்படுத்தும் விதமாக "கழிவில் இருந்து கலை" என்ற புதுமையான கண்காட்சி சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தில்நேற்றுநடைபெற்றது.தெற்குரெயில்வேயின் சென்னைகோட்டம்சார்பில்தீவிரமாககடைபிடிக்கப்பட்டு வரும் தூய்மை பிரசாரத்தின் ஒரு பகுதியாக நடந்த, இந்த கண்காட்சியை தெற்கு ரெயில்வேயின் தலைமை ரோலிங் ஸ்டாக் என்ஜினீயர் வி.எஸ்.பிரபாகர் தொடங்கி வைத்தார்.

தெற்குரெயில்வேபொதுமேலாளர்யு.சுப்பாராவ் மற்றும் சென்னை கோட்ட ரெயில்வே மேலாளர் சைலேந்திர சிங் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோட்ட அதிகாரிகள் மற்றும் ஏராளமான ரெயில்வே ஊழியர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இதில், பயன்படுத்த முடியாத பழைய ஸ்பிரிங்குகள், உலோகக்கலன்கள், டிரம்ஸ்கள் மற்றும் என்ஜின் பாகங்கள் எனமொத்தம்2,665கிலோகழிவுபொருட்களைசேகரித்து, அழகிய கலை பொருட்களாக மாற்றினார்கள். கண்காட்சியில், தேசியக் கொடியை ஏந்தியபடி நிற்கும் கார்கில் விஜய் திவாஸ் நினைவு, இஸ்ரோ ராக்கெட் மாதிரி மற்றும் இந்திய வரைபடம், மயில் உருவம், விலங்குகளின் வடிவங்கள், பழமையான ரெயில்கள் என வைக்கப்பட்டிருந்த பல்வேறு படைப்புகள் பயணிகளையும் குழந்தைகளையும் வெகுவாக கவர்ந்தன.

# சிதம்பரம் அருகே குடியிருப்புக்குள் புகுந்த முதலை: பொதுமக்கள் பீதி!



கடலூர், அக். 1

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே உள்ள நாஞ்சலூர் கிராமத்தில், நேற்று நள்ளிரவில் குடியிருப்பு பகுதிக்குள் புகுந்த 8 அடி நீள ராட்சத முதலை வனத்துறையினரால் பாதுகாப்பாகமீட்கப்பட்டது.இந்தசம்பவத்தால்அப்பகுதி மக்கள் கடுமையான பீதிக்குள்ளாகினர்.

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே உள்ள நாஞ்சலூர் கிராமத்தில் கோலவிழி அம்மன் கோவில் அமைந்துள்ளது. அந்த பகுதியில் உள்ள குடியிருப்புவாசி ஒருவரின் வீட்டில் முன்னால் நேற்று (செவ்வாய்க்கிழமை) நள்ளிரவில் ராட்சத முதலை ஒன்று படுத்து கிடந்தது. அந்த வீட்டின் உரிமையாளர் ஒருவர், அதிகாலையில் தனது வீட்டின் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்துள்ளார். அப்போது, அவரது வீட்டு வாசலில் மரம் போல ஏதோ ஒன்று நீளமாகக் கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

உற்று நோக்கியபோது, அது சுமார் 110 கிலோ எடை மற்றும் 8 அடி நீளம் கொண்ட ராட்சத முதலை என்பது தெரியவந்தது. இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவர் எழுப்பிய அபாயக் குரலையடுத்து, சுற்றுவட்டாரப் பகுதி மக்கள் அனைவரும் சம்பவ இடத்தில் திரண்டனர். குடியிருப்பு பகுதியில் முதலை பதுங்கியிருந்த தகவல் காட்டுத்தீ போல பரவியதால் கிராம மக்கள் அச்சமடைந்தனர்.

இதுகுறித்து உடனடியாக சிதம்பரம் வனச்சரக அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவல் அறிந்தவுடன் வனச்சரக அலுவலர்கள் மற்றும் வன ஊழியர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். வனத்துறையினர் பொதுமக்கள் உதவியுடன், அந்த ராட்சத முதலையை மிகுந்த எச்சரிக்கையுடனும் லாவகமாகவும் கயிற்றால் கட்டிப் பிடித்தனர். பிடிபட்ட முதலை ஆரோக்கியமாக இருப்பதை உறுதி செய்த வனத்துறையினர், அதனை வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.

பழைய கொள்ளிடம் ஆற்றுப் படுகை மற்றும் நீர்நிலைகளில் இருந்து இந்த முதலை குடியிருப்புக்குள் நுழைந்திருக்கலாம் என வனத்துறையினர் தெரிவித்தனர். மீட்கப்பட்ட 8 அடி நீள முதலை, சிதம்பரம் பகுதியில் முதலைகளின் முக்கிய வாழ்விடமாக விளங்கும் வக்காரமாரி ஏரியில் பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டது.

மழைமற்றும்நீர்வரத்துஅதிகமாகஇருக்கும்காலங்களில் பழைய கொள்ளிடம் கரையோரக் கிராம மக்கள் மற்றும் நீர்நிலைகளுக்கு அருகில் வசிப்பவர்கள் நள்ளிரவு நேரங்களில்விழிப்புடன்இருக்குமாறுவனத்துறைதரப்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ஜெம் கிரானைட் வீரமணி மீது இதுவரை 3 வழக்குகள் பதிவு



சென்னை, அக்.1

ஜெம் கிரானைட்ஸ் உரிமையாளர் வீரமணி இதுவரை 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த புகார் அடிப்படையில் 2 வழக்குகளில் சிக்கி தொழில் அதிபர் வீரமணி தற்போது புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருக்கு உடந்தையாக இருந்ததாக சாந்தி என்பவரும், அவரது கணவர் மகேந்திர சிம்ஹன், வீரமணியின் உதவியாளர் கணேசன் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வழக்கை முதலில் சென்னை விபசார தடுப்புப்பிரிவு போலீசார் விசாரித்து வந்தனர். தற்போது இந்த வழக்கை கூடுதல் கமிஷனர் தேன்மொழி தலைமையிலான சிறப்பு புலனாய்வு படை விசாரித்து வருகிறது. ஏற்கனவே 2 வழக்குகளில் சிக்கி உள்ள வீரமணி மீது, தற்போது 3வது வழக்கு ஒன்றும் பாய்ந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது வீரமணி, தான் பணம் செலவழித்து படிக்க வைக்கும்சிறுமிகளைபாலியல்துன்புறுத்தல்செய்துள்ளார். அந்தவகையில் வீரமணியிடம் கல்வி உதவித் தொகை பெற்ற சென்னை ஐஸ்ஹவுஸ் பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமி வீரமணியின் பாலியல் தொல்லையால் தற்கொலை செய்து கொண்டதாக சிறுமியின் தாயார் கொடுத்த புகாரின் பேரில் வீரமணி மீது புதிதாக ஒரு போக்சோ வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்தநிலையில், வீரமணியால் படிக்க வைக்கப்பட்டு பாலியல் ரீதியாக சீரழிக்கப்பட்ட மேலும் ஒரு சிறுமியின் தாயார் பரபரப்பு புகார் கொடுத்துள்ளார். அதுதொடர்பாகவும், வீரமணி மீது 3வது வழக்கு பாய்ந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தற்போது புகார் கூறிய சிறுமியை தனது சொகுசு காரில் வைத்து அவர் பாலியல் பலாத்காரம் செய்ததாக புகாரில் கூறப்பட்டுள்ளது.தொடர்ந்துஅடுத்தடுத்து பாலியல் வழக்குகளில் சிக்கி வரும் தொழில்அதிபர்வீரமணி மீதும், அவரோடு கைது செய்யப்பட்டுள்ள சாந்தி, அவரது கணவர் மகேந்திர சிம்ஹன் ஆகியோர் மீதும் குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.அதற்கானஏற்பாடுகளைசிறப்புபுலனாய்வு படைபோலீசார்செய்துவருவதாகவும்தெரிகிறது. வீரமணி மீது வழக்கு போடாமல் இருக்க கோடிக்கணக்கில் பணம் வாங்கிய குற்றச்சாட்டுக்கள் குறித்தும் தனியாக விசாரணை நடந்து வருகிறது. அதுதொடர்பாக ஏற்கனவே காங்கிரஸ் பிரமுகர்ரஞ்சன்குமாரிடம்விசாரணைநடத்தப்பட்டுள்ளது. இதையொட்டி மேலும் சில அரசியல் பிரமுகர்களிடம் விசாரணை நடத்தவும் சிறப்பு புலனாய்வு படை போலீசார் திட்டமிட்டுள்ளனர். சிறுமிகளுக்கு பாலியல் வன்கொடுமை செய்ததாக வீடியோ ஆதாரத்தின் அடிப்படையில் முதல் வழக்கு. 2004இல் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான சிறுமியை தற்கொலைக்கு தூண்டியதாக, சிறுமியின் தாய் அளித்த புகாரில் மற்றொரு வழக்கு; மற்றொரு சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை செய்ததாகதனியாகஒருபோக்சோவழக்குஎன3வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒருவாரத்திற்குள் நீதிமன்றத்தில்முதற்கட்ட குற்றப்பத்திரிகையை எஸ்.ஐ.டி. அளிக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தடகள வீராங்கனை வித்யா ராமராஜூக்கு உதயநிதி ஸ்டாலின் பாராட்டு





சென்னை, அக். 1

என்று உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளர். இது தொடர்பாக, சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் கூறப்பட்டிருப்பதாவது: திமுக தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசால் விளையாட்டுத் துறைக்கு அளிக்கப்பட்ட ஆதரவும், கட்டமைப்புகள் மீதான முதலீடும் தற்போது ஜப்பானின் ஐச்சி நகோயாவில் நடைபெற்று வரும் 20வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், சிறப்பான பலனை அளித்து வருவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். பெண்களுக்கான 400 மீட்டர் தடைதாண்டும் ஓட்டப்பந்தயத்தில் 54.75 வினாடிகளில் பந்தயத்தை நிறைவு செய்து புதிய சாதனையைப் படைத்துள்ள தமிழ்நாட்டின் மிகச் சிறந்த தடகள வீராங்கனை வித்யா ராமராஜுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வித்யா ராமராஜின் விளையாட்டுத் திறமையை அங்கீகரித்து, அவருக்கு ELITE பிரிவின்மூலமும், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைமூலமும்தேவையானஉதவிகளைதிராவிட மாடல்அரசுவழங்கியுள்ளது.எளியகுடும்பப்பின்னணியில் இருந்து வந்த வித்யா ராமராஜ், இன்று லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறார். மேலும், இந்தியாவிற்காக ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளஅபிநயா, விஷால், ராஜேஷ் ரமேஷ், அபய் சிங், ஜோஸ்னாசின்னப்பா, வேலவன்செந்தில்குமார், பரணிகா, ஹரிஹரன் மற்றும் காமலினி ஆகிய தமிழ்நாட்டு வீரர், வீராங்கனைகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் வாயிலாக வழங்கப்பட்ட நிதியுதவி மற்றும் 3 சதவீத விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் 300 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கப்பட்ட அரசு வேலைவாய்ப்பு போன்ற நடவடிக்கைகள், நமது விளையாட்டுவீரர்கள்இத்தகையஉயரங்களைஎட்டுவதற்கு குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளன. விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்களது திறமைகளை தொடர்ந்து வளர்த்துக்கொண்டு, மேலும் பல சாதனைகளைப் படைக்கும் வகையில், தற்போதைய அரசு தொடர்ந்து தேவையான ஆதரவையும் ஊக்கத்தையும் வழங்கும் என நம்புகிறேன்.நமதுவிளையாட்டுநட்சத்திரங்கள்தொடர்ந்து உயர்ந்து,உலகஅரங்கில்தமிழ்நாட்டிற்கும்இந்தியாவிற்கும் பெருமை சேர்க்கட்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "வாழ்த்துகள் சாம்பியன்ஸ்!"... இந்திய வீராங்கனைகளை பாராட்டிய சரத்குமார்




சென்னை, அக். 1

ஜப்பானின் ஐச்சிநகோயாவில் நடைபெற்ற 2026 ஆசியவிளையாட்டுப்போட்டிகளில்இந்தியப்பெண் விளையாட்டு வீராங்கனைகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப்பதிவுசெய்ததுமிகுந்தபெருமைக்குரிய விஷயமாகும். என சரத்குமார் பதிவிட்டுள்ளார்.

ஜப்பானின் அய்ச்சி மாகாணத்தில் உள்ள நகோயா நகரில் 20வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இத்தொடரில் இந்திய வீரர், வீராங்கனைகள் பதக்கங்களை குவித்து வருகின்றனர். குறிப்பாக தடகளப் போட்டிகளில் இந்திய வீராங்கனைகள் சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர். தற்போது இந்திய அணி 9 தங்கம், 21 வெள்ளி, 27 வெண்கலம் என மொத்தம் 57 பதக்கங்களுடன்பதக்கப்பட்டியலில்8வதுஇடத்திற்கு முன்னேறியுள்ளது.

இந்த நிலையில், இந்திய வீராங்கனைகளின் சாதனைகளை பாராட்டி நடிகர் சரத்குமார் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது,

ஜப்பானின் ஐச்சிநகோயாவில் நடைபெற்ற 2026 ஆசியவிளையாட்டுப்போட்டிகளில்இந்தியப்பெண் விளையாட்டு வீராங்கனைகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப்பதிவுசெய்ததுமிகுந்தபெருமைக்குரிய விஷயமாகும். குறிப்பாக, பெண்களுக்கான 400 மீட்டர்தடை ஓட்டப் போட்டியில், ஜாம்பவான்பி.டி. உஷாவின் 42 ஆண்டுகால தேசிய சாதனையை முறியடித்து வரலாறு படைத்துள்ள, தமிழ்நாட்டின் கோயம்புத்தூரைச் சேர்ந்த திறமையான வீராங்கனை வித்யா ராம்ராஜை நான் மனதாரப் பாராட்டுகிறேன். 54.75 வினாடிகள் என்ற சிறப்பான நேரத்தைப் பதிவு செய்த வித்யா, 1984 லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் பி.டி. உஷா படைத்திருந்த 55.42 வினாடிகள் என்ற நீண்டகால சாதனையை முறியடித்தார்.

இந்தச் சிறப்பிற்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக, கிரண், மச்செட்டிரா பூவம்மா, பிராச்சி மற்றும் வித்யா ராம்ராஜ் ஆகியோர் அடங்கிய குழு, பெண்களுக்கான 4×400 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியில் 3:29.69 நிமிடங்களில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கப் பதக்கம் வென்றது.

சர்வதேச அரங்கில் இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ள இந்தச்சிறந்த வீராங்கனைகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். இவர்களின் மன உறுதி, அர்ப்பணிப்பு மற்றும் விளையாட்டுத்திறன் ஆகியவை இளம் விளையாட்டு வீரர்களின் தலைமுறைகளுக்கு உத்வேகம் அளித்து, அவர்களை இன்னும் பல மகத்தான வெற்றிகளை நோக்கி அழைத்துச் செல்லட்டும்.

2026 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 8 தங்கம், 21 வெள்ளி மற்றும் 26 வெண்கலம் என மொத்தம் 55 பதக்கங்களை வென்று இந்திய விளையாட்டு வீரர்கள் நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளனர்!

பதக்கம் வென்றவர்கள் மற்றும் இந்திய அணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவர்களின் சிறப்பான சாதனைகளுக்காக எனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துகள் வெற்றியாளர்களே! பாராட்டுக்கள் இந்திய அணியே!

ஜெய் ஹிந்த்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தமிழக வெற்றி கழகத்தில் இணைகிறார் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செம்மலை?



திருப்பூர், அக். 1

இடைத்தேர்தலில்தாராபுரம்தொகுதியில்போட்டியிடும் த.வெ.க. வேட்பாளரை ஆதரித்து, முதல்அமைச்சர் விஜய் பிரசாரம் செய்கிறார்.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. வேட்பாளர் சத்தியபாமா, தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு த.வெ.க.வில் இணைந்தார். இதனால் அந்த தொகுதிக்கு வருகிற 6ந்தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த தொகுதியில் த.வெ.க. சார்பில் சத்தியபாமா. தி.மு.க. சார்பில் சுகன்யா, அ.தி.மு.க. சார்பில் பானுமதி, நாம் தமிழர் கட்சியின் சார்பில் கார்த்திகா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் லெட்சுமணன் உள்பட 22 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இந்த தொகுதியில் 5 முனைப்போட்டி நிலவுகிறது.

தேர்தலுக்கு இன்னும் 6 நாட்களே இருப்பதால், பிரதான கட்சி வேட்பாளர்களின் பிரசாரம் சூடுபிடித்துள்ளது. இந்த நிலையில்த.வெ.க. வேட்பாளர்சத்தியபாமாவுக்கு ஆதரவு கேட்டு அந்த கட்சியின் தலைவரும், தமிழக முதல் அமைச்சருமானவிஜய்இன்று(புதன்கிழமை)தாராபுரத்தில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பேச உள்ளார்.

இதற்காக தாராபுரத்தில் இருந்து உடுமலை செல்லும் சாலையில் கொண்டரசம்பாளையம் மாருதி நகரில் 54 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமாக மைதானம் தயார் செய்யப்பட்டு பணி நிறைவடைந்துள்ளது. இந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு முதல்அமைச்சர் விஜய் ஆதரவு திரட்டுகிறார்.

பொதுக்கூட்டத்தில் பங்கேற்க 10 ஆயிரம் பேருக்கு 'கியூஆர்' கோடுடன் கூடிய சிறப்பு அனுமதி வழங்கப்படுகிறது. இந்த பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக இன்று மதியம் சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் முதல்அமைச்சர் விஜய் புறப்பட்டு மதியம் 1 மணிக்கு கோவை விமான நிலையம் வருகிறார். அங்கிருந்து கார் மூலம் பொதுக்கூட்டம் நடைபெறும் மேடைப்பகுதிக்கு மதியம் 3 மணிக்கு வருகிறார்.

இந்நிலையில் தாராபுரத்தில் பிரசாரம் மேற்கொள்வதற்காக, முதல்அமைச்சர் விஜய் பயணிக்கும் விமானம், சென்னை விமான நிலையத்தில் இருந்து கோவை புறப்பட்டு சென்றது. தற்போது பொதுக்கூட்டம் நடைபெறும் மேடைப்பகுதி அருகே த.வெ.க. தொண்டர்கள்குவியதொடங்கி உள்ளனர்.

இந்த சூழலில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செம்மலை தமிழக வெற்றி கழகத்தில் இன்று இணைய உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தாராபுரத்தில் இன்று நடைபெறும் தேர்தல் பிரச்சார கூட்டத்தில்தமிழக முதல்அமைச்சர்விஜய் முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் அவர் இணைய இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் தோல்விக்குப் பிறகு, எடப்பாடி பழனிசாமியின் தலைமையிலான அதிமுகவில் உட்கட்சி பூசல் நிலவி வந்த சூழலில், முன்னாள்முதல்அமைச்சர்ஜெயலலிதாஅமைச்சரவையில் அமைச்சராக பதவி வகித்த செம்மலை அக்கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு அதிமுகவில் எனக்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டன. தற்போது அதிமுக கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ள நிலையில் தொடர்ந்து அக்கட்சியில் பயணிக்க எனது மனம் இடம் தரவில்லை. ஆகையால் தான் தற்போது அதிமுக கட்சியில் இருந்து விலகும் மிக கடினமான முடிவை எடுத்துள்ளேன்" என்று தெரிவித்திருந்தார்.

கடந்த2001ஆம்ஆண்டுஓமலூர்தொகுதியில்சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட செம்மலை, சுகாதாரத்துறை மற்றும் கல்வித்துறை அமைச்சராக பதவி வகித்தார்.

கடந்த 2009 நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுக சார்பில் சேலம் தொகுதியில் போட்டியிட்டு எம்.பி. ஆக வெற்றி பெற்றார் செம்மலை. கடந்த 2016 ஆம் ஆண்டு தமிழக சட்ட சபையில் தற்காலிக சபாநாயகர் ஆகும் இவர் பணியாற்றியுள்ளார்.

முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு இவருக்கு போதிய வாய்ப்புகள் கிடைக்கவில்லை.நடந்துமுடிந்தசட்டமன்றத்தேர்தலிலும் இவருக்கு சீட் வழங்கப்படவில்லை.

# நெல்லையில் நடந்த இரட்டை கொலை சம்பவம் தொடர்பாக கணவன், மனைவி கைது

நெல்லை, அக். 1

கல்வி, கலாசாரம், தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் இந்தியாவின் முன்னணி மாநிலமாக திகழும் மாநிலம் தமிழகம். அனைத்திற்கும் மேலாக 'அமைதிப் பூங்கா' என கருதப்படும் தமிழகத்தில், அதிகரித்து வரும் தொடர் படுகொலை சம்பவங்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன.

முக்கியமாக தென் மாவட்டங்களான நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இந்த ஆண்டு இதுவரை மொத்தம் 141 கொலைகள் நடந்து உள்ளன.

இதில் முதலிடத்தில் தூத்துக்குடி மாவட்டம் உள்ளது. இந்த ஆண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் 51 கொலைகளும், நெல்லை மாவட்டத்தில் 47 கொலைகளும் (3 இரட்டைக் கொலைகள் உள்பட), தென்காசி மாவட்டத்தில் 20 கொலைகளும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 23 கொலைகளும் நடந்து உள்ளன.

இது ஒட்டுமொத்த பொதுமக்களையும் பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. இந்த நிலையில், நேற்று ஒரே நாளில் மட்டும் தமிழகம் முழுவதும் 8 கொலைகள் நடந்து உள்ளன.

இதன்படி நெல்லை டவுன் அருகே உள்ள மணிபுரம் பகுதியை சேர்ந்தவர் டால்டன் (வயது 76). இவர் அந்த பகுதியில் பெட்ரோல் பங்க் வைத்து உள்ளார். இவரது அண்ணன் நிக்கோலஸ் ராஜரத்தினம் (78). அதே பகுதியை சேர்ந்தவர் செந்தில் (43). இவரது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட கோவில் டால்டன் வீட்டின் அருகே உள்ளது.

இந்த கோவிலை சுற்றியுள்ள காலி இடத்தில் டால்டன் குடும்பத்தினர் தங்களின் காரை நிறுத்துவது வழக்கம். இதை செந்தில் கண்டித்து வந்தார். இந்த 'பார்க்கிங்' தகராறு காரணமாக நேற்று டால்டன், அவரது அண்ணன் நிக்கோலஸ் ராஜரத்தினம் ஆகியோரை செந்தில் கத்தியால் குத்திக்கொன்றதாக கூறப்படுகிறது.

செந்தில்குமார் சென்னையில் வெல்டராக வேலை செய்து வந்துள்ளார். இவருக்கு ரஞ்சிதா என்ற மனைவியும், 3 மகள்களும் உள்ளனர். இந்த நிலையில் செந்தில்குமார் விடுமுறையில் ஊருக்கு வந்திருந்தார். நேற்று காலை கோவில் அருகே காரை நிறுத்துவது தொடர்பாக செந்தில்குமாருக்கும், டால்டனின் மகன் நரேனுக்கும் இடையே தகராறு ஏற்பட்டு கைகலப்பாக மாறியது.

இதை பார்த்த நரேனின் பெரியப்பா நிக்கோலஸ் ராஜரத்தினம் தகராறை விலக்கிவிடுவதற்காக சென்றுள்ளார். அப்போது செந்தில்குமார் மறைத்து வைத்திருந்த கத்தியால் நிக்கோலஸ் ராஜரத்தினத்தை சரமாரியாக குத்தினார். இதில் அவர் அலறிதுடித்து ரத்த வெள்ளத்தில் சாய்ந்து விழுந்தார். அவரது சத்தம் கேட்டு டால்டன் அங்கு ஓடி சென்றார். அப்போது ஆத்திரம் தீராத செந்தில்குமார் டால்டனையும் சரமாரியாக கத்தியால் குத்தினார். இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த டால்டனின் மகன் நரேன், செந்தில்குமாரை தடுக்க முயன்றார். இதில் அவருக்கும் கத்திக்குத்து விழுந்தது. மேலும் டால்டனை குத்தியபோது செந்தில்குமாரின் கைகளிலும் கத்திக்குத்து ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே அப்பகுதி மக்கள் இதைப்பார்த்து போலீசில் புகார் செய்துள்ளனர். சம்பவ இடத்திற்கு டவுன் போலீசார் விரைந்து சென்று ரத்த வெள்ளத்தில் கிடந்த டால்டன் மற்றும் நிக்கோலஸ் ராஜரத்தினம் ஆகியோரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். டால்டன் நெல்லை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் வரும் வழியிலேயே டால்டன் இறந்து விட்டதாக தெரிவித்தனர். மேலும் நிக்கோலஸ் ராஜரத்தினம் நெல்லை சந்திப்பு பகுதியில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் சிகிச்சை பலனின்றி சிறிது நேரத்திலேயே நிக்கோலஸ் ராஜரத்தினம் பரிதாபமாக இறந்தார்.

இதற்கிடையே காயமடைந்த நரேன், கொலையாளி செந்தில்குமார் ஆகியோரும் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# ரப்பர் விலை கிடுகிடு உயர்வு... குமரி மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி!



குலசேகரம், அக். 1

குமரி மாவட்டத்தில் ரப்பர் விலை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் ரப்பர் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

குமரி மாவட்டத்தில் முக்கிய வேளாண் சார்ந்த உற்பத்தி பொருளான ரப்பரின் விலை கடந்த பல ஆண்டுகளில் இல்லாத வகையில் அதிகரித்து வருகிறது. தென்னிந்தியாவில் முக்கிய ரப்பர் உற்பத்தி மாநிலமான கேரளத்திலும் தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்திலும் செப்டம்பர் மாதம் இயல்புக்கு மாறாக கடும் வெயில் நிலவி வருகிறது. இதனால் ரப்பர் மரங்களில் பால் உற்பத்தி குறைவாக உள்ளது.

இதில் குறிப்பாக மாவட்டத்தில் கடந்த 2 வாரங்களுக்கு முன்பு வெயிலின் தாக்கத்தால் ரப்பர் பால் உற்பத்தி 30 சதவீதம் வரை குறைந்து காணப்பட்டது. இந்த நிலையில் மலையோரப் பகுதிகளில் அவ்வப்போது மிதமான சாரல் மழை பெய்து வரும் நிலையில் பால் உற்பத்தி சற்று அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் கேரளத்திலும், குமரி மாவட்டத்திலும் ரப்பர் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நேற்று கோட்டயம் சந்தையில் வியாபாரி விலையாக ஆர்.எஸ்.எஸ். 4 தர ரப்பரின் விலை கிலோவுக்கு ரூ.271 ஆகவும், ஆர்.எஸ்.எஸ். 5 தர ரப்பரின் விலை கிலோவுக்கு ரூ.266 ஆகவும், ஐ.எஸ்.எஸ். தர ரப்பரின் விலை கிலோவுக்கு ரூ.256 ஆகவும் அதிகரித்து காணப்பட்டது.

அதே வேளையில் ரப்பர் வாரியம் வெளியிட்ட விலையில் ஆர்.எஸ்.எஸ். 4 தர ரப்பர் கிலோவுக்கு ரூ.279 ஆகவும், ஆர்.எஸ்.எஸ். 5 தர ரப்பரின் விலை கிலோவுக்கு ரூ.274 ஆகவும் இருந்தது. 80 சதவீத ஒட்டுப்பாலின் விலை கிலோவுக்கு ரூ.191 ஆக இருந்தது.

ரப்பரின் இந்த விலையேற்றத்தால் குமரி மாவட்டத்தில் ரப்பர் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இது குறித்து குலசேகரத்தில் முன்னோடி ரப்பர் வியாபாரி ஒருவர் கூறுகையில்,

அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையில் போர் நிலவி வந்த நிலையில் இந்தியாவுக்கு கச்சா எண்ணை வரத்து பாதிக்கப்பட்டது. கச்சா எண்ணையில் இருந்து செயற்கை ரப்பர் தயாரிக்கப்படும் நிலையில், கச்சா எண்ணை வரத்து பாதிப்பால் செயற்கை ரப்பரின் விலை அதிகரித்தது. தொடர்ந்து இயற்கை ரப்பரின் விலையும் அதிகரித்து வந்தது. தற்போது கச்சா எண்ணையின் இறக்குமதி சீராகியுள்ளது. எனினும் ரப்பர் விலை அதிகரித்து வருகிறது.

இதற்கு ஆட்டோமொபைல் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும், ரப்பரின் தேவை அதிகரிப்பும் காரணமாகும். தற்போது நாட்டில் ரப்பரின் தேவையை விட உற்பத்தி குறைவாக உள்ளது. இதனால் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. உற்பத்திக்கும், தேவைக்குமான இடைவெளி குறையும் போது விலை குறைய வாய்ப்பு உள்ளது என்றார்.

# நீலகிரி பந்திப்பூர் சாலையில் லாரியை வழிமறித்து உணவைத் தேடிய காட்டு யானை




நீலகிரி, அக். 1

நீலகிரி பந்திப்பூர் தேசிய நெடுஞ்சாலையில், உணவுப் பொருட்களை ஏற்றி வந்த லாரியை ஒற்றைக் காட்டு யானை நடுரோட்டில் வழிமறித்து துரத்திய சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நீலகிரி மாவட்டம், முதுமலை புலிகளை காப்பகத்தை ஒட்டி, பந்திப்பூர் புலிகள் காப்பகம் அமைந்துள்ளது. இவ்வழியாக, மைசூரு தேசிய நெடுஞ்சாலை செல்கிறது. இந்த சாலையோரம் உலா வரும் யானைகள் சில நேரங்களில், உணவைத் தேடி வாகனங்களை வழிமறித்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தி வருவது தொடர்கிறது.

இந்த நிலையில் கர்நாடக மாநிலம் பந்திப்பூர் வனப்பகுதி வழியாக நீலகிரிக்கு செல்லும் தேசிய நெடுஞ்சாலையில், லாரிகளில் கொண்டு செல்லப்படும் கரும்பு, தக்காளி மற்றும் உணவுப்பொருட்களின் வாசனைக்கு பழகிப்போன ஒற்றை காட்டு யானை ஒன்று, சாலையின் நடுவே நின்று வாகனங்களை மறிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இந்த சாலையில் வந்த உணவுப் பொருட்கள் ஏற்றிய லாரி ஒன்றை அந்த யானை வழிமறித்தது. ஓட்டுநர் லாரியை பின்னோக்கி இயக்க முயன்றபோதும், யானை விடாமல் லாரியை நோக்கி முன்னேறி வந்து துரத்தியது. பின்னர் லாரியில் இருந்து கீழே விழுந்த உணவுப் பொருட்களை அந்த யானை எடுத்து சாப்பிட்டது. இந்த துரத்தல் சம்பவத்தை அங்கிருந்த மற்ற வாகனஓட்டிகள் தங்களது மொபைல் போன்களில் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளனர். இந்த வீடியோ வைரலாகி வருகிறது.

யானையின் இந்த செயலால் நீலகிரி பந்திப்பூர் சாலையில் நீண்ட நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதனால் வாகனங்கள் நீண்ட வரிசையில் அணிவகுத்து நின்றன. யானை வாகனங்களை மறிப்பதால் சுற்றுலா பயணிகளும், வாகன ஓட்டிகளும் பெரும் அச்சமடைந்தனர்.

வனப்பகுதி சாலைகளில் பயணிக்கும் வாகன ஓட்டிகள், விலங்குகளுக்கு தின்பண்டங்களோ அல்லது உணவோ வழங்கக் கூடாது என வனத்துறையினர் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளனர். மனிதர்கள் தரும் உணவுகளுக்கு விலங்குகள் பழகிவிடுவதாலேயே இது போன்ற ஆபத்தான சம்பவங்கள் தொடர்வதாகவும், விதிகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வனத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனுமதியின்றி இயக்கிய மினி பேருந்துகளை ஆட்டோ ஓட்டுநர்கள் சிறைபிடித்து போராட்டம்... !



விழுப்புரம், அக். 1

அனுமதியின்றி இயக்கிய மினி பேருந்துகளை சிறைபிடித்து ஆட்டோ ஓட்டுநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே உள்ள அப்பம்பட்டு பகுதியில் புதிய வழித்தடங்களில் அனுமதியின்றி மினி பேருந்துகள் இயக்கப்படுவதாக ஆட்டோ ஓட்டுநர்கள் கடந்த 3 தினங்களுக்கு முன்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் அளித்துள்ளனர். எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் நேற்று விதிகளை மீறி இயக்கிய 3 தனியார் மினி பேருந்துகளை ஆட்டோ ஓட்டுநர்கள் சிறைபிடித்து தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக கூறி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட்டார போக்குவரத்து அதிகாரிகள் சம்பந்தப்பட்ட இடத்தில் ஆய்வு செய்து, விதிகளை மீறி புதிய வழித்தடங்களில் இயக்கப்படும் மினி பேருந்துகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆட்டோ ஓட்டுநர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# முதல் அமைச்சர் விஜய் ரோடுஷோவிற்காக கடைகளை மூட உத்தரவு வியாபாரிகள் வேதனை



திருப்பூர், அக். 1

முதல் அமைச்சர் விஜய்யின் ரோடு ஷோ நிகழ்ச்சிக்காக கடைகளை மூட உத்தரவிட்ட நிலையில் அப்பகுதியில் உள்ள தொழில் பாதிப்படைவதாக வியாபாரிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தொகுதியில் உள்ள குண்டடத்திற்கு இன்று முதல் அமைச்சர் விஜய் பிரசாரத்திற்காக வருகை தருகிறார். இந்த நிலையில் பாதுகாப்பிற்காக அப்பகுதியில் உள்ள கடைகளை அகற்ற சொன்னதால் வியாபாரிகள் சிலர் வேதனை அடைந்துள்ளனர். இது குறித்து அப்பகுதியில் உள்ள வியாபாரிகள் சிலர், "எல்லா கடைகளையும் மூட உத்தரவிட்டால் சோறுக்கு என்ன செய்வது? ஏற்கனவே தண்ணீரும் இல்லை, மழையும் இல்லை தொழிலை நம்பி தான் வாழ்க்கையை நடத்துகிறோம். தற்போது கடைகளை மூட சொன்னால் என்ன செய்வது? சும்மா பார்த்து விட்டு செல்வதற்கு எதற்கு இவ்வளவு பாதுகாப்பு" என கேள்வி எழுப்பி குற்றம்சாட்டியுள்ளனர்.

# காந்தி ஜெயந்தி: தமிழகத்தில் அக்டோபர் 2ந்தேதி அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம்




சென்னை, அக். 1

காந்தி ஜெயந்தியான அக்டோபர் 2ந்தேதி தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டம் நடத்த வேண்டும் என தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

காந்தி ஜெயந்தியான அக்டோபர் 2ந்தேதி தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டம் நடத்த வேண்டும். இதில் கிராம ஊராட்சியின் நிர்வாகம், நிதிநிலை, வளர்ச்சிப்பணிகள், குடிநீர், தூய்மை, சுகாதாரம், வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து கூட்டத்தில் விவாதிக்க வேண்டும்.

கிராமசபை கூட்டம் காலை 11 மணியளவில் நடத்த வேண்டும். கூட்டம் நடைபெறும் இடம், நேரம் மற்றும் விவாதிக்கப்படும் பொருட்கள் குறித்து பொதுமக்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும். கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களையும் வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும்.

அரசின் திட்டங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும். கிராமசபையின் ஒப்புதலுடன் பிற முக்கிய பொருட்களையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை முறையாக பதிவு செய்து, அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கை தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் விஷு மகாஜன் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் வரும் 2.10.2026, காந்தி ஜெயந்தி தினத்தன்று கிராம சபை கூட்டம் நடைபெறவுள்ளது. எனவே, பொதுமக்கள் அனைவரும் தங்கள் கிராம ஊராட்சியில் நடைபெறும் கிராம சபைக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

# பாதாள சாக்கடை திட்டம்: தனியார் வசம் ஒப்படைக்க தமிழக அரசு முயற்சி சு.வெங்கடேசன் எம்.பி. கண்டனம்



மதுரை, அக். 1

குப்பைகளை அகற்றுவதிலேயே முழுத்தோல்வி அடைந்துள்ள தனியார் நிர்வாகங்களிடம், இப்பொழுது பாதாள சாக்கடை திட்டத்தையும் ஒப்படைத்தால் நகரம் முழுவதும் நாறிப்போகும் என சு.வெங்கடேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, மதுரை நாடாளுமன்ற தொகுதியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி. சு.வெங்கடேசன் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

மதுரை மாநகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தை அரசு தனியார் பங்களிப்பு (PPP) என்ற பெயரில் முழுமையாகத் தனியார் வசம் ஒப்படைக்க தமிழக அரசு டெண்டர் கோரியுள்ள நடவடிக்கைக்கு எனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே தூய்மைப் பணியைத் தனியாருக்குக் கொடுத்ததன் மூலம், கோவில் நகரமான நமது மதுரை இன்று குப்பை நகரமாக மாறியுள்ளது. நாளொன்றுக்கு ஆயிரம் டன் குப்பைகளை அகற்ற வேண்டிய தனியார் நிறுவனம், குப்பைக்குப் பதில் மண்ணை அள்ளிப்போட்டு பெரும்லாபம் சம்பாதித்துக்கொண்டிருக்கிறது.

இது குறித்து மாநகராட்சி ஆணையர் புகார் அளித்தும், போராட்டம் நடத்தியும் கூட, கடந்த ஆட்சியிலும் இந்த ஆட்சியிலும் எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்க முடியவில்லை.

குப்பைகளை அகற்றுவதிலேயே முழுத்தோல்வி அடைந்துள்ள தனியார் நிர்வாகங்களிடம், இப்பொழுது பாதாள சாக்கடை திட்டத்தையும் ஒப்படைத்தால் நகரம் முழுவதும் நாறிப்போகும்.

உடனடியாக இந்த முயற்சியைத் தமிழக அரசு கைவிட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கமுதி அருகே மின் வயர் அறுந்து விழுந்து அக்கா தம்பி உயிரிழப்பு



ராமநாதபுரம், அக். 1

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மீது மின்வயர் அறுந்து விழுந்தது தெரியாமல் அதனை தொட்ட 6 வயது சிறுவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். தம்பி மின்சாரம் தாக்கி உயிரிழந்தது தெரியாமல் அவரை தொட்ட 10 வயது அக்காவும் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கமுதி அருகே உள்ள பகுதியில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில், அங்குள்ள மின்வயர் ஒன்று எதிர்பாராதவிதமாக அறுந்து தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மீது விழுந்ததாக கூறப்படுகிறது.

இதனை அறியாமல் அங்கு சென்ற பிரவீன் (6), மின்வயரை தொட்டுள்ளார். அப்போது அவர் மீது மின்சாரம் பாய்ந்ததாக தெரிகிறது. இதில் பிரவீன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

தம்பி மின்சாரம் தாக்கி கீழே விழுந்தது தெரியாமல் அவரை நிறைமதி (10) தொட்டுள்ளார். அப்போது அவரையும் மின்சாரம் தாக்கியதில், நிறைமதியும் பரிதாபமாக உயிரிழந்தார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிறுவனும், சிறுமியும் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. சம்பவம் குறித்து அதிகாரிகள் மற்றும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் எப்போது..? தேர்தல் ஆணையம் அளித்த விளக்கம்



சென்னை, அக். 1

ஐகோர்ட்டு வழக்கை முடித்ததும், 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்தப்படும் என்று சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளதால் திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க ஐகோர்ட்டு தடை விதித்தது. அந்த தடையை நீக்கக்கோரி முதல்அமைச்சர் விஜய் உள்ளிட்டோர் மனு தாக்கல் செய்தனர். இந்த வழக்கு, தலைமை நீதிபதி தர்மாதிகாரி, நீதிபதி அருள்முருகன் அடங்கிய அமர்வு முன், நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, தேர்தல் ஆணையம் தரப்பு கூறுகையில், "இடைத்தேர்தல் அறிவிக்காதது நிரந்தரமானதல்ல. வழக்கை ஐகோர்ட்டு முடித்ததும் தேர்தல் நடத்தப்படும். பெருந்துறை தொகுதி தேர்தல் வழக்கு நிராகரிக்கப் பட்டதால் அத்தொகுதி காலியாக உள்ளது. எனினும், மேல்முறையீட்டுக்கு, நவம்பர் 24ம் தேதி வரை அவகாசம் இருப்பதால் சட்டப்படி முடிவு எடுக்க அனுமதிக்க வேண்டும்.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தில் தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்ட முதல் நாளிலேயே தேர்தல் நடத்த வேண்டும் என கூறப்படவில்லை. ஆறு மாதகால அவகாசம் வழங்கியுள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் மக்கள் பிரதிநிதி வேண்டும் என்பதை தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கிறது. தேர்தல் வழக்குகளை ஆறு மாதங்களில் விசாரித்து முடிக்க வேண்டும். அதே காலகட்டத்துக்குள் இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் கூறுகிறது.

தேர்தல் வழக்கில் ஐகோர்ட்டு முடிவெடுத்த பின், திருச்சி கிழக்கு உள்ளிட்ட தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்துவது குறித்து அறிவிக்கப்படும். இடைத்தேர்தல் நடத்துமாறு தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட வேண்டும் என்ற முதல்அமைச்சர் விஜய் உள்ளிட்டோரின் கோரிக்கையை நிராகரிக்க வேண்டும்" என்று அதில் கூறப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின் போது, முதல்அமைச்சர் விஜய், முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.விஜய பாஸ்கர், சி.விஜயபாஸ்கர், இசக்கி சுப்பையா ஆகியோர் தரப்பில் இடைத்தேர்தல் நடத்துமாறு வாதிடப்பட்டது. திருச்சி கிழக்கு தி.மு.க., வேட்பாளர் இனிகோ இருதயராஜ் தரப்பில், தேர்தல் வழக்கு நிலுவையில் இருப்பதால், இடைத்தேர்தல் நடத்தக்கூடாது' என வாதிடப்பட்டது. இதையடுத்து, தேர்தல் ஆணையம் தரப்பு வாதத்துக்காக விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

தின கனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

01.10.2026

# சென்னை மாநகராட்சி ஆணையாளர் தலைமையில், ஊட்டச்சத்து குழுக் கூட்டம்..!



சென்னை, அக். 1

சென்னை மாவட்டத்தில் உள்ள குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பருவப் பெண்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கான மாவட்ட ஊட்டச்சத்து குழுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இதுதொடர்பாக, சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

சென்னை மாவட்டத்தில் உள்ள குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பருவப் பெண்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவது தொடர்பாக மாவட்ட ஊட்டச்சத்து குழுக் கூட்டம் மாநகராட்சிஆணையாளர்மற்றும்மாவட்ட ஊட்டச்சத்து குழுவின் தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் தலைமையில், இன்று (30.09.2026) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த பல்வேறு அரசுத் துறைகளின் ஒருங்கிணைந்த செயல்படுதல், ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளை ஆரம்பக்கட்டத்திலேயே கண்டறிந்து, மருத்துவச்சிகிச்சை, மாவட்ட ஆரம்பகால தலையீட்டு மையத்தின் (DEIC) வழிகாட்டுதல் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சேவைகளுடன் இணைத்தல், சமச்சீர் உணவு, ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பான குடிநீர் பயன்பாடு குறித்து மக்களிடையே தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அங்கன்வாடி மையங்கள் மூலம் வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், மாவட்டத்தின் ஊட்டச்சத்து அளவீடுகளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்து மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு, ஊட்டச்சத்து மேம்படுத்தும் நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்ளவும், அனைத்து துறைகளும் ஒன்றிணைந்து செயல்படும் போது மட்டுமே மாவட்டத்தின் ஊட்டச்சத்து குறியீடுகளில் நிலையான முன்னேற்றத்தை அடைய முடியும் என ஆணையாளர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், இணை ஆணையாளர் (கல்வி) க. கற்பகம், துணை ஆணையாளர் (சுகாதாரம்) தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் மாவட்டத் திட்ட அலுவலர்கள் ஜெயஸ்ரீ, பி.முத்துலெட்சுமி, மாநகராட்சி, சமூகநலத்துறை, உணவுபாதுகாப்புத்துறை, மருத்துவத்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், பள்ளிக்கல்வித்துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உள்ளிட்ட துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உணவு பாதுகாப்புத்துறை சார்பில், மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன் தலைமையில் நடைபெற்றது.

# கயத்தாறு குளங்களில் சரளை மண், கரம்பை மண் கடத்தல்: விவசாயிகள் வேதனை



தூத்துக்குடி, செப். 2

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு பகுதியில் 20க்கும் மேற்பட்ட குளங்களில் இருந்து தினமும் 1,000 நடை லாரிகளில் சரளை மண், கரம்பை மண் கடத்தல் நடைபெறுவதாக புகார்கள் எழுந்துள்ளன.

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு வட்டத்தில் உள்ள 80க்கும்மேற்பட்ட குளங்களில், சுமார்20க்கும்மேற்பட்ட குளங்களில் இருந்து தினமும் செம்மண், சரளை மண் மற்றும் கரம்பை மண் ஆகியவை சட்டவிரோதமாக வெட்டி எடுக்கப்பட்டு பல கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக புகார்கள் எழுந்துள்ளன.

ஊரக வளர்ச்சித் துறை, வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த்துறை வாயிலாக விவசாய நிலங்களை மேம்படுத்துவதற்காகக் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு கயத்தாறு வட்டாட்சியர் பாலசுப்பிரமணியத்திடம் பலர் அனுமதிச்சீட்டு பெற்றுள்ளனர். ஆனால், விவசாய பயன்பாட்டிற்கு பதிலாக, நூற்றுக்கும் மேற்பட்ட டிப்பர் லாரிகள் மூலம் தினமும் 500 முதல் 1,000 நடைகள் வரை இரவு பகலாக செம்மண் மற்றும் சரளை மண் வணிக நோக்கில் கடத்தப்பட்டு வருகிறது.

மேலும், இப்பகுதியில் உள்ள வண்டல் மற்றும் கரம்பை மண் ஆகியவை உண்மையான விவசாயிகளுக்கு கிடைக்காமல், சிவகாசியில் உள்ள பட்டாசு தயாரிப்பு ஆலைகளுக்கு இரவோடு இரவாக லாரிகள் மூலம் கடத்தப்பட்டு வருகிறது. இதனால் சொந்த தேவைக்கு மண் எடுக்க அனுமதி பெற முடியாமல் அப்பகுதி விவசாயிகள் பெரும் வேதனை அடைந்துள்ளனர்.

கயத்தாறு வட்டாரப் பகுதியில் தினமும் பல கோடி ரூபாய் மதிப்பிலான கனிம வளங்கள் கொள்ளையடிக்கப்படுவது குறித்து கனிமவளத்துறை மற்றும் தூத்துக்குடி மாவட்ட அதிகாரிகளுக்கு பொதுமக்கள் சார்பில் தொலைபேசி மற்றும் மனுக்கள் மூலம் பலமுறை புகார்கள் அளிக்கப்பட்டன. ஆனால், கனிமவளத்துறை அதிகாரிகள் தங்களின் கடமைக்காக ஏதோ வழியில் செல்லும் ஒரு சில லாரிகளை மட்டும் பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்து, வாரத்திற்கு ஒரு வழக்கு என பதிவு செய்து கண்துடைப்பு நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபட்டு வருவதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கயத்தாறு பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த கனிமவளக் கொள்ளையைத் தடுக்கத் தவறிய அதிகாரிகள் மற்றும் தவறு இழைப்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். கனிம வளங்கள் கொள்ளை போவதைத் தடுத்து நிறுத்தி, குளங்களை பாதுகாக்கவும், விவசாயிகளுக்கு உரிய முறையில் கரம்பை மண் கிடைக்கவும் தமிழக அரசும், தூத்துக்குடி மாவட்ட நிர்வாகமும் உடனடியாக தலையிட வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் (01.10.2026)

**மேஷம்:** குடும்பத்தில் நல்ல சூழல். வேலையில் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால்நிலுவைப்பணிகள் நகரும். அவசரமாக பதிலளிப்பதைத் தவிர்க்கவும்.

**ரிஷபம்:** உங்கள் கருத்துக்கு மதிப்பு கிடைக்கும். புதிய பொறுப்புகள் வரலாம். பண விஷயங்களில் நிலைத்தன்மை காணப்படும்.

**மிதுனம்:** வேலை தொடர்பான பேச்சுத் திறனால் நல்ல அங்கீகாரம் கிடைக்கலாம். புதிய தகவல் உங்கள் முடிவை மாற்றக்கூடும்.

**கடகம்:** குடும்பத்தில் அமைதி. வேலை மெதுவாக இருந்தாலும் சீராக முன்னேறும். தூக்கம் மற்றும் ஓய்வில் கவனம் செலுத்துங்கள்.

**சிம்மம்:** குடும்ப முடிவுகளில் உங்கள் ஆலோசனை முக்கியமாக இருக்கும். குழுவை வழிநடத்தும் வாய்ப்பு கிடைக்கலாம்; அகந்தையைத் தவிர்க்கவும்.

**கன்னி:** பணிகள் அதிகமாக இருக்கும். முன்னுரிமை வைத்து செயல்பட்டால் திட்டங்களை நேரத்தில் முடிக்கலாம்.

**துலாம்:** குடும்பத்தினருடனும் குழந்தைகளுடனும் நேரம் செலவிடுவது மனநிம்மதி தரும். கூட்டுத் தொழில்/புதிய ஒப்பந்தங்களில் முழுமையாக ஆராய்ந்து முடிவெடுக்கவும்.

**விருச்சிகம்:** பழைய எண்ணங்களை மாற்றி புதிய அணுகுமுறையை ஏற்கும் நாள். தொழில் தொடக்கம் அல்லது மாற்றத்துக்கு சாதகமான சூழல் இருக்கலாம்.

**தனுசு:** வியாபாரப் பயணம் அல்லது வெளிநாட்டுதொடர்பானவேலைகள் வரலாம். கூட்டுத் தொழிலில் வெளிப்படைத்தன்மை அவசியம்.

**மகரம்:** குடும்ப ஆதரவு கிடைக்கும். உங்கள் உழைப்பு பெரியவர்களின் கவனத்திற்கு வரலாம். உடல் சோர்வுக்கு ஓய்வு கொடுங்கள்.

**கும்பம்:** நண்பர்கள் / உறவினர்களுடன் தொடர்பு அதிகரிக்கும். புதிய தகவல் அல்லது வாய்ப்பு தொடர்புகள் மூலம் வரலாம். தேவையற்ற ஆன்லைன் செலவுகளைத் தவிர்க்கவும்.

**மீனம்:** வேலையில் நேர்மையும் முயற்சியும் நல்ல பலனைத் தரலாம். வருமானத்துக்குப் புதிய வாய்ப்புகள் தோன்றலாம்; குடும்ப சூழல் அமைதியாக இருக்கும்.

# ஏ.கே. மோட்டூர் பெரிய ஏரிக்கரையில் 5,000 பனை விதைகள் நடும் விழாவில் ஊராட்சி மன்ற தலைவர் பங்கேற்பு



திருப்பத்தூர் எண்ணங்களின் சங்கமம் அமைப்பின் தலைவர் JP ஐயா அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வரும் ஒரு கோடி பனை விதைகள் நடும் நிகழ்வின் ஒரு பகுதியாக, ஏ.கே. மோட்டூர் ஊராட்சி மற்றும் எண்ணங்களின் சங்கமம் அமைப்பு (NDSO) இணைந்து பெரிய ஏரிக்கரையில் 5,000 பனை விதைகள் நடும் விழா நடைபெற்றது.

இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், நீர்நிலைகளைச் சுற்றியுள்ளபகுதிகளில்பனைமரங்களின் எண்ணிக்கையைஅதிகரிக்கவும்ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், பெரிய ஏரிக்கரை முழுவதும் 5,000 பனை விதைகள் நடப்பட்டன.

இந்நிகழ்வில் ஏ.கே. மோட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் NDSO வின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பு. வேலு கலந்து கொண்டு பனை விதைகள் நடும் பணியை தொடங்கி வைத்தார். விழாவை ஒருங்கிணைப்பாளர் ஆறுமுகம் ஒருங்கிணைத்தார்.

மேலும், சமூக ஆர்வலர் முனியப்பன், ஊராட்சி 100 நாள் பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு பனை விதைகளைநடும்பணியில்ஆர்வத்துடன் ஈடுபட்டனர்

# “டோரதி போன்ற படம் வந்ததற்கு பெருமைப்படுகிறேன்” தமிழரசன் பச்சமுத்து




“டோரதி போன்ற ஒரு திரைப்படம் தமிழ் சினிமாவில் இருந்து வந்ததற்கு நான் பெருமை அடைகிறேன். இந்த அற்புதமான படத்தை இயக்கிய கார்த்திக் சுப்பராஜ் இருக்கும் இதே திரைத்துறையில் நானும் ஒரு அங்கமாக இருப்பதிலும் பெருமை கொள்கிறேன்.”எனபாராட்டிதமிழரசன்பச்சமுத்துபதிவிட்டுள்ளார். தமிழ் சினிமாவில் தனக்கென தனி பாணியை உருவாக்கியுள்ள இயக்குநர்களில் ஒருவர் கார்த்திக் சுப்பராஜ். இவரது இயக்கத்தில் உருவான ‘டோரதி’ திரைப்படம் கடந்த 25ந்தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியானது. இப்படத்தில் கீர்த்தி சுரேஷ் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். ரிஷிகாந்த், சனந்த் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். 1990களின் பின்னணியில் நடைபெறும் கதையாக உருவாகியுள்ள ‘டோரதி’, சாதி சார்ந்த வன்முறை மற்றும் இரு நண்பர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இப்படத்திற்கு இளையராஜா இசையமைத்துள்ளார். திரு ஒளிப்பதிவு செய்துள்ளார். கார்த்திக்சுப்பராஜ் இயக்கத்தில் வெளியாகும் 10வது திரைப்படம் என்ற சிறப்பையும் இப்படம் பெற்றுள்ளது. வெளியானது முதலே ‘டோரதி’ திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் கவனம் பெற்று வருகிறது. கீர்த்தி சுரேஷின் நடிப்பும் பாராட்டுகளை பெற்று வரும் நிலையில், திரையுலகைச் சேர்ந்த பலரும் படத்தை பாராட்டி வருகின்றனர். நடிகர் தனுஷ், நடிகை ஸ்ரீலீலா, இயக்குநர் மணிரத்னம் உள்ளிட்டோரும் ‘டோரதி’ படத்தை பாராட்டி சமூக வலைதளங்களில் பதிவிட்டிருந்தனர். இதனால் படத்தின் மீதான எதிர்பார்ப்பும் கவனமும் மேலும் அதிகரித்துள்ளது. இந்த நிலையில், ‘லப்பர் பந்து’ திரைப்படத்தின் மூலம் கவனம் பெற்ற இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து, ‘டோரதி’ படத்தை பாராட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். அவர் தனது பதிவில், “டோரதி போன்ற ஒரு திரைப்படம் தமிழ் சினிமாவில் இருந்து வந்ததற்கு நான் பெருமை அடைகிறேன். இந்த அற்புதமான படத்தை இயக்கிய கார்த்திக் சுப்பராஜ் இருக்கும் இதே திரைத்துறையில் நானும் ஒரு அங்கமாக இருப்பதிலும் பெருமை கொள்கிறேன். கார்த்திக் சுப்பராஜுக்கு சல்யூட்!” என்று தெரிவித்துள்ளார். தமிழரசன் பச்சமுத்துவின் இந்த பாராட்டு பதிவு தற்போது சமூக வலைதளங்களில் கவனம் பெற்று வருகிறது.

# "தமிழ் சினிமாவின் மாஸ்டர் பீஸ் டோரதி!" இயக்குநர் ராஜு முருகன் நெகிழ்ச்சிப் பதிவு!




'டோரதி' படம் தமிழ் சினிமாவின் மாஸ்டர் பீஸ்களில் ஒன்று. பாலினஏற்றத்தாழ்வுகளைஅடித்து நொறுக்கும் ஆயுதமாய், அழகாய், ஆங்காரமாய் நம்முன் நிமிர்ந்து நிற்கிறாள் இந்த டோரதி. பேசா பொருளை பேசத் துணிந்து, அதை இவ்வளவு அற்புதமாய் செய்திருக்கும் தோழன் கார்த்திக் சுப்புராஜை எவ்வளவு பாராட்டினாலும்தகும்.எனஇயக்குநர்ராஜுமுருகன்பதிவிட்டுள்ளார்.

தமிழ் சினிமாவில் தனக்கென தனி பாணியை உருவாக்கியுள்ள இயக்குநர்களில் ஒருவர் கார்த்திக் சுப்பராஜ். இவரது இயக்கத்தில் உருவான ‘டோரதி’ திரைப்படம் கடந்த 25ந்தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியானது. இப்படத்தில் கீர்த்தி சுரேஷ் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். ரிஷிகாந்த், சனந்த் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

1990களின் பின்னணியில் நடைபெறும் கதையாக உருவாகியுள்ள ‘டோரதி’, சாதி சார்ந்த வன்முறை மற்றும் இரு நண்பர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இப்படத்திற்கு இளையராஜா இசையமைத்துள்ளார். திரு ஒளிப்பதிவு செய்துள்ளார். கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் வெளியாகும் 10வது திரைப்படம் என்ற சிறப்பையும் இப்படம் பெற்றுள்ளது.

வெளியானது முதலே ‘டோரதி’ திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் கவனம் பெற்று வருகிறது. கீர்த்தி சுரேஷின் நடிப்பும் பாராட்டுகளை பெற்று வரும் நிலையில், திரையுலகைச் சேர்ந்த பலரும் படத்தை பாராட்டி வருகின்றனர். நடிகர் தனுஷ், நடிகை ஸ்ரீலீலா, இயக்குநர் மணிரத்னம், இயக்கநர் தமிழரசன் பச்சமுத்து உள்ளிட்டோரும் ‘டோரதி’ படத்தை பாராட்டி சமூக வலைதளங்களில் பதிவிட்டிருந்தனர். இதனால் படத்தின் மீதான எதிர்பார்ப்பும் கவனமும் மேலும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், குக்கூ, ஜோக்கர், ஜிப்சி, மெஹந்தி சர்க்கஸ் போன்ற படங்களை இயக்கி கவனத்தை பெற்ற இயக்குநர் ராஜு முருகன் ‘டோரதி’ படத்தை பாராட்டி சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். அவர் தனது பதிவில், 'டோரதி' தமிழ் சினிமாவின் மாஸ்டர் பீஸ்களில் ஒன்று. பாலின ஏற்றத்தாழ்வுகளை அடித்து நொறுக்கும் ஆயுதமாய், அழகாய், ஆங்காரமாய் நம்முன் நிமிர்ந்து நிற்கிறாள் இந்த டோரதி. பேசாபொருளை பேசத் துணிந்து, அதை இவ்வளவு அற்புதமாய் செய்திருக்கும் தோழன் கார்த்திக் சுப்புராஜை எவ்வளவு பாராட்டினாலும் தகும். நன்றி கார்த்தி. மிகச்சிறந்த பங்களிப்பை அளித்திருக்கும் சனந்த், ரிஷிகாந்த், கீர்த்தி சுரேஷ் உள்ளிட்ட அத்தனை நடிகர்களுக்கும், ஒளிப்பதிவாளர் திரு உள்ளிட்ட மொத்த படக்குழுவினருக்கும் வாழ்த்துகள். கடும் நெடும் பயணங்களில் தீரவே தீராத காதலாய் உடன் வரும் ராஜா சாருக்கு நன்றியை தவிர வேறென்ன சொல்லமுடியும்..! என்று தெரிவித்துள்ளார்.

# ஜான், ஷாய், அமீர் சதம்; இந்தியாவுக்கு இமாலய இலக்கு நிர்ணயித்த வெஸ்ட் இண்டீஸ்



ஜான், ஷாய், அமீர் ஆகிய 3 வீரர்கள் சதம் விளாசியதையடுத்து வெஸ்ட் இண்டீஸ் 405 ரன்கள் குவித்துள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் அணி 3 ஒருநாள், 5 டி20 போட்டிகள்கொண்ட தொடரில்விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையேயான முதல் ஒருநாள் போட்டியில் வெஸ்ட் இண்டீசை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இந்தியா அபார வெற்றிபெற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையேயான 2வது ஒருநாள் போட்டி கவுகாத்தியில் இன்று நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதனை தொடர்ந்து முதலில் பேட்டிங் செய்த வெஸ்ட் இண்டீஸ் வீரர்கள் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

அந்த அணியின் ஜான் சேப்பல், கேப்டன் ஷாய் ஹோப், அமீர் ஜன்கோ ஆகிய 3 வீரர்களும் அதிரடியாக சதம் விளாசினர். ஜான் 68 பந்துகளில் 101 ரன்களும், ஷாய் ஹோப் 94 பந்துகளில் 104 ரன்களும், அமீர் ஜன்கோ 77 பந்துகளில் 114 ரன்களும் குவித்தனர்.

இறுதியில் வெஸ்ட் இண்டீஸ் 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 405 ரன்கள் குவித்துள்ளது. இந்தியா தரப்பில் ஜடேஜா, குல்தீப், குர்னூர் பிரார் தலா 2 விக்கெட்டுகளையும், பிரசித் கிருஷ்ணா தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர். இதனை தொடர்ந்து 406 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி இந்தியா களமிறங்கி விளையாட உள்ளது.

# கடைசி ஒருநாள் போட்டி: தென் ஆப்பிரிக்கா பந்து வீச்சு தேர்வு



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இடையேயான கடைசி ஒருநாள் போட்டியில் தென் ஆப்பிரிக்கா பந்து வீச்சு தேர்வு செய்துள்ளது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள், 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதல் 2 ஒருநாள் போட்டிகளிலும் தென் ஆப்பிரிக்கா அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 20 என்ற கணக்கில் தென் ஆப்பிரிக்கா கைப்பற்றியது.

இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான கடைசி ஒருநாள் போட்டி இன்று நடைபெற உள்ளது. போட்செப்ஸ்ட்ரூம் மைதானத்தில் நடைபெறும் இப்போட்டிக்கான டாஸ் சுண்டப்பட்டது.

இதில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதனை தொடர்ந்து ஆஸ்திரேலிய அணி முதலில் பேட்டிங் செய்து வருகிறது.

மழை காரணமாக போட்டி தொடங்குவதில் சற்று காலதாமதம் ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# தென் ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியா 3வது ஒருநாள் போட்டி: டாஸ் தாமதம்



தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா இடையேயான கடைசி ஒருநாள் போட்டி இன்று நடைபெற உள்ளது. ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள், 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் 2 ஒருநாள் போட்டிகளிலும் தென் ஆப்பிரிக்கா அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 20 என்ற கணக்கில் தென் ஆப்பிரிக்கா கைப்பற்றியுள்ளது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான கடைசி ஒருநாள் போட்டி இன்று நடைபெற உள்ளது. போட்செப்ஸ்ட்ரூம் மைதானத்தில் இப்போட்டி நடைபெற உள்ள நிலையில் அப்பகுதியில் திடீரென மழை பெய்து வருகிறது. மழை காரணமாக டாஸ் சுண்டப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆட்டம் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.